IN THE COURT OF DISTRICT MUNSIF KATPADI, VELLORE DISTRICT.
OS.No.25/2015
Deposition of Witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தினகரன்ராஜ் | Caste | : | |
| Father Name | : | கோட்டீஸ்வரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the13th day of , July 2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை: -**

1. அருண்குமார், தனலட்சுமி ஆகியோரிடம் நான் வாங்கிய கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் ஆவணம் கிடைக்கவில்லை. நகல் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யாத நிலையில் கிணறு, பம்செட் எனக்கு மட்டும் தான் சொந்தம் என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் ஆவணங்கள் அனைத்தையும் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனக்கு சொத்தை கிரையம் செய்த அருண்குமார், தனலட்சுமி, லோகேஷ்ராஜ் ஆகியோர்கள் கிணற்றையும் , பம்செட்டையும் உபயோகிக்கவில்லை நான் தான் உபயோகித்து கொண்டிருக்கிறேன். கிணற்றில் முழு பாகத்தையும் வாங்கியதாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கிணற்றுக்கு முழு பாகம் எங்களுக்கு உரியது என்ற ஆவணத்தை கொடுத்துள்ளேன். அப்படி என்றால் அருண்குமார், தனலட்சுமி, லோகேஷ்ராஜ் ஆகியோரிடம் முழு சொத்தையும் வாங்கினேனா என்றால் இல்லை. பாதி தான் வாங்கினேன். சொத்தை மட்டும் பாதி வாங்கி விட்டு கிணற்றை முழுவதுமாக வாங்கினோமா என்றால் சொத்தை தான் பாதி வாங்கினோம்.

2. வா.த.சா. 26, 29, 30 ஆகிய ஆவணங்களில் கிணற்றில் உள்ள பாதி பாகம் தான் மற்றும் சர்வீஸ் கனெக்ஸனிலும் 241, மற்றும் 318 யிலும் பாதி தான் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.த.சா. 1 பற்றி எனக்கு ஏதும் தெரியாது. அதை நான் படித்து பார்க்கதா தால் தான் கிணற்றிலோ , அல்லது சர்வீஸ்லோ

பாதி பாகம் கிடையாது என்று சொல்கிறேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் தந்தைக்கு தான் தெரியும்.

3. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள கிணறு சம்மந்தமாக வழக்கு நடந்து கொண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட ஆவணமானது **வா.த.சா.ஆ . 32** ஆக பி.வா.சா.1மூலம் குறியீடு செய்யப்படுகிறது. சர்வீஸ் கனெக்ஸன் மாற்றுவதற்கு நான் வாதியிடம் ஏதேனும் கையொப்பம் பெற்றேனா என்றால் நான் ஏதும் வாங்கவில்லை. நான் எந்த சொத்தை அடமானம் போட்டேன் என்றால் எந்த சர்வே எண் என்பது என் வழக்கறிஞர்க்கு தான் தெரியும். அந்த அடமானம் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளஙேன். இந்த வழக்கிற்கு முன்பாகவே அடமானம் வைத்தேன். எனக்கு அடமானம் பற்றி தெரியாது என்றால் தெரியும். அதன் விவரங்கள் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

4. வாதி சொத்துக்கு நான் அடமானம் போட்டேன் என்றால் எந்த சர்வே எண் என்று எனக்கு தெரியாது. வாதி வாங்கிய சொத்துக்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. வாதி இடத்தில் பொங்கல் வைத்தால் எனக்கு பிரச்சனை கிடையாது. ஆனால் என் இடத்தில் வைக்கும் போது பிரச்சனை வருகிறது. அது சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என் பதிலுரையில் கூர் சீட்டு பற்றி குறிப்பிட்டுள்ள நிலையில் அது என்ன என்று எனக்கு தெரியாது. பத்தி 8 ல் என்னுடைய பதிலுரையில் வாதிக்கு 3 லட்சம் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது பற்றி ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அடமானம் போட்டு வாங்கினார்கள். அடமானம் கொடுத்தாக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு நடப்பதால் தாக்கல் செய்யவில்லை.

5. என்னுடைய பதிலுரையில் பத்தி 15யில் சர்வீஸ் கனெக்ஸனை மாற்றுவதற்கு வாதிகள் no objection கொடுத்தாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் வாங்கிய

கிரைய பத்திரத்தின் நகல், புகார், அடமானப்பத்திரம் , ஆட்சேபனை இல்லை என்பதற்குண்டான ஆவணம், மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தையும் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். என்னுடைய பெயரில் சர்வீஸ் கனெக்ஸன் மாற்றுவதற்கு இன்றைய தேதி வரை முயற்சி செய்யவில்லை என்றால் இல்லை. தாவா சொத்தான கிணறு மற்றும் பம்செட் ஆகியவற்றில் எனக்கு என்ன உரிமை உள்ளதோ அதே போல் வா.த.சா.ஆ 1 ன் படி வாதிகளுக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் உரிமை இல்லை.

6. அப்படி என்றால் வா.த.சா.ஆ 26 யின் படி அதாவது நான் வாங்கிய கிரைய பத்திரத்தின் படி கிணற்றில் அரை பாகம் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் மீதி பாகம் யாருடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லோகேஷ்ராஜிடம் மற்றும் அவருடைய குடும்பத்தினரிடம் என்னுடைய பாகம் போக மீதி பாகம் யாருடையது என்று கேட்டேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய அசல் ஆவணத்தை தாக்கல் செய்தால் வழக்கின் உண்மை தெரிய வந்திடும் என்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுடைய சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவற்றை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். தகவல் அறியும் சட்டத்தின் படி ஆவணத்தை படித்து பார்த்ே தனா என்றால் இல்லை. தாவானது வாதி கோரிய படி EX.A 1 மற்றும் EX.A 26 ன் படியும் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை பெயரில் சர்வீஸ் கனெக்ஸன் உள்ளது என்றால் தான் வாதிக்கு தண்ணீர் விடுவதற்கு இடையூறு செய்கிறேனா என்றால் சரிதான். தாவாவில் கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI